# அறிவு, விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் பெறுவதில் தீர்மானம்

விருத்தசேதனம் அடைந்திருக்கிற அவர்களும் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளாமலிருக்கிறார்கள்; அப்படியிருந்தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைக் குறித்து மேன்மை பாராட்டும்படிக்கு நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள். நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை; விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம் (கலா. 6:13-15).

உடல் ரீதியாக செயல்கள் தேவனுக்கு முக்கியமானவைகளாக உள்ளன. இது, நியாயப்பிரமாணத்தின் கீழ் விருத்தசேதனம் பெறாத மனிதன் தனது மக்களினின்று அறுப்புண்டு போகப்பட்ட உண்மையில் காணப்படுகின்றது (ஆதி. 17:14). இருப்பினும், சரியான வகையிலான வாழ்வை உள்ளடக்காத விருத்தசேதனமானது விருத்தசேதனமின்மை என்றே கருதப்பட வேண்டியதாய் இருந்தது (ரோமர் 2:25). அது போலவே, ஞானஸ் நானத்துடன் இணைந்துள்ள ஆவிக்குரிய கொள்கைகளுக்கு நாம் இருதயப் பூர்வமாகக் கீழ்ப்படிந்தால் மட்டுமே ஞானஸ்நானம் மதிப்புள்ளதாகின்றது. இது நமது பகுதியில் உடல் ரீதியான செயலை மட்டுமின்றி நமது இருதயம் இணைவிக்கப்பட்டிருத்தலையும் உள்ளடக்குகின்றது.

எவ்விஷயத்திலும் தேவன் அவருடனான நமது உறவுமுறையில் வெறுமையான உடல் ரீதியான செயல்களை மட்டும் கேட்டுக் கொண்டிருப்பதில்லை; அவர் இருதயத்தையும் அதே வேளையில் செயல்களையும் கவனிக்கின்றார். எலியாபின் தோற்றம் மற்றும் உயரம் ஆகியவற்றின் அடிப்படையில், அவரை இஸ்ரவேலின் அரசராகத் தேவன் தேர்ந்தெடுத்தார் என்று சாமுவேல் தவறாக முடிவு செய்தார். அவரிடத்தில் தேவன், "நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ

*இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1 சாமு. 16:7).*

*கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்ட ஒரு வாழ்வை - ஒரு புது வாழ்வை - தேவன் (நம்மிடத்தில்) விரும்புகின்றார் (கலா. 6:14, 15). நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது ஒரு புது வாழ்வில் உட்புகாதிருந்தால், நமது ஞானஸ்நானம் மதிப்பற்றதாகின்றது; ஏனெனில் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் அனுபவிக்கின்ற மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து ஒரு புது வாழ்வு வர வேண்டியதாக உள்ளது (ரோமர் 6:4).*

*இந்த மாற்றத்திற்குப் பவுலின் வாழ்வானது நிறைவான எடுத்துக் காட்டாக உள்ளது. ஞானஸ்நானத்தில் அவர் தமது பழைய மனுஷனை மரணமடையச் செய்து, பிறகு இயேசுவுக்காகப் புதுவாழ்வொன்றைத் தொடங்கினார். ரோமர் 6:4-6 வசனப் பகுதிகள் நமக்குப் பின்வருமாறு கூறுகின்றன:*

> *மேலும் பிதாவின் மகிமையினால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப் பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*

*பவுல் இதைப் பின்வரும் வகையில் எடுத்துரைத்தார்: "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா. 2:20).*

## நாம் அறிய வேண்டியது என்ன?

*அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் கிறிஸ்தவரானவர்கள், தாங்கள் ஞானஸ்நானம் பெறுவது அவசியமாயிருந்தது என்று கற்றுக் கொண்ட அதே நாளிலேயே ஞானஸ்நானம் பெற்றதால் நாம் அறிய வேண்டியதெல்லாம் தேவன் ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டார் என்பதே என்று சிலர் முடிவு செய்துள்ளனர். இருப்பினும், இதை விட அதிகமானது போதிக்கப்பட்டது, இது, ஞானஸ்நானம் பெறுபவர்களிட மிருந்து இதை விட அதிகமானவைகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று அர்த்தப்படுகின்றது. ஆண்களும் பெண்களும் இயேசுவின் சீஷர்களாக வேண்டும் என்று அவர்களை இணங்க வைப்பதற்காகப் பின்வரும் சத்தியங்கள் போதிக்கப்பட்டன:*

1. உண்மையான தேவன் ஒருவரே (அப். 3:13; 14:15; 17:23-31). மக்களை இரட்சிப்புக்குள் கொண்டு வருவதற்காக, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் தேவன் யூதர்களுக்குப் பிரசங்கிக்கப் பட்டார். பிற்பாடு பவுல், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின உயிருள்ள தேவனைப் பற்றிப் புறஜாதியாருக்குப் பிரசங்கித்தார்.

2. இயேசு கர்த்தரும் கிறிஸ்துவுமாய் இருக்கின்றார், அவரே தேவகுமாரன் (அப். 2:36; 4:10, 11; 5:42; 9:20, 22; 10:36; 17:3; 18:5, 28 ஆகிய வசனங்களைக் காணவும்.) இயேசுவே தேவகுமாரனாகிய கிறிஸ்துவாக இருக்கின்றார் என்று விசுவாசித்தலின் அடிப்படையிலேயே ஆவிக்குரிய வாழ்வு அமைந்துள்ளது (யோவா. 20:30, 31).

3. கர்த்தருடைய வசனம் இரட்சிக்கின்றது (அப். 11:14; 16:32; 2 தீமோ. 4:2ஐயும் காணவும்).

4. இயேசுவே இரட்சகராக உள்ளார். இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் உட்பட முழுமையான சுவிசேஷம் பிரசங்கிக்கப் பட்டது. (அப். 2:32; 8:5, 25, 35; 14:7, 21; 16:10; 1 கொரி. 2:1, 2; 15:1-4 ஆகிய வசனங்களைக் காணவும்.)

5. இயேசு இன்றி நாம் இழந்துபோகப்பட்ட நிலையிலும் மன்னிப்பு தேவைப்பட்ட நிலையிலும் இருக்கின்றோம் (அப். 4:10-12).

6. நாம் நமது வாழ்வை மாற்றுதல் என்ற மனந்திரும்புதலை நடப்பித்தல் அவசியமாக உள்ளது (அப். 2:38; 3:19; 17:30).

7. நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன (அப். 2:38; 22:16).

8. தேவனுடைய இராஜ்யம் பற்றிய சத்தியமானது பிரசங்கிக்கப் பட்டது (அப். 8:12; 19:8; 20:25; 28:23, 31).

எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு எதை அறிந்து கொண்டிருக்க முடிந்தது? (அப். 8:26-39 வரையிலும் காணவும்.) பிலிப்பு, ஏசாயா 53ன் வசனப்பகுதி ஒன்றிலிருந்து அவருக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். இந்த தீர்க்கதரிசனத்திலிருந்து அவர், இயேசுவைப் பற்றிப் பின்வருமாறு போதிக்க முடிந்தது: "நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்" (வ. 5); "கர்த்தரோ, நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (வ. 6); "அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும்" (வ. 10); "என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்" (வ. 11); "அநேகருடைய பாவத்தை (அவர்) தாமே சுமந்தார்" (வ. 12).

பிலிப்பு, "தேவனுடைய இராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து" (அப். 8:12) சமாரியர்களுக்குப் பிரசங்கித்தவற்றையே அவருக்கும் பிரசங்கித்திருப்பார். சுருக்கமாய்க் கூறுவதென்றால், "அவர் இயேசுவைக் குறித்து அவருக்குப் பிரசங்கித்தார்" (அப். 8:35).

இதன் விளைவாக, எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றுக்

கொள்ள விரும்பினார். அவர் இயேசுவே தனது (மந்திரியின்) பாவங்களுக்காக மரித்திருந்த கிறிஸ்து என்று புரிந்து கொண்டார் என்று நாம் முடிவு செய்ய இயலும். அவர் தாம் கிறிஸ்துவின் இராஜ்யத்தினுள் பிரவேசிக்க கூடும்படிக்கு மறுபடியும் பிறக்க (யோவா. 3:5) விரும்பியதை அவர் அறிந்தார். அவர் கிறிஸ்துவைப் பின்பற்றும்படி உறுதி எடுக்க மனதாயிருந்தார், மற்றும் ஞானஸ்நானம் பெறுவதால் இயேசுவின் மரணத்தின் மூலம் தமது பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்று அவர் விரும்பினார். கிறிஸ்தவராக விரும்பும் எவரும் நிச்சயமாக இதே விஷயங்களை அறிந்திருக்க வேண்டும்.

## நாம் விசுவாசிக்க வேண்டியது என்ன

நாம் இரட்சிக்கப்படுவதற்கு, நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் (மாற். 16:16; 1 பேது. 3:21). இரட்சிக்கப்படுவதற்கு நாம் விசுவாசிக்க வேண்டிய ஒவ்வொன்றும் ஞானஸ்நானம் பெறுவதற்கும் கூட விசுவாசிக்கப்பட்டாக வேண்டும். நாம் விசுவாசிக்க வேண்டிய பின்வரும் விஷயங்களைக் கவனியுங்கள்:

- நாம் பாவிகளாய் இருக்கின்றோம் (1 தீமோ. 1:15).
- தேவன் இருக்கின்றார், தம்மை உண்மையாகவே தேடுகின்றவர்களுக்கு அவர் பலன் அளிக்கின்றார் (எபி. 11:6).
- இயேசுவே "நானே இருக்கிறேன்" என்பவராயிருக்கிறார்.[1]
- இயேசுவே கிறிஸ்துவும் (யோவா. 20:30, 31) ஆண்டவருமாய் (அப். 2:36) இருக்கின்றார், இது அவர் கூறுவதை நாம் செய்வோம் என்று அர்த்தப்படுத்துகின்றது (மத். 7:21; லூக். 6:46).
- இயேசுவின் வசனங்களும் (யோவா. 5:47; 12:49, 50) மற்றும் சுவிசேஷமும் (மாற். 16:15, 16; ரோமர் 1:16; எபே. 1:13) விசுவாசிக்கப்பட வேண்டியவைகளாய் உள்ளன.
- இயேசுவைப் பற்றிய சாட்சியமும் (யோவா. 17:20; 2 தெச. 1:10) மற்றும் இராஜ்யத்தைப் பற்றிய போதனையும் (அப். 8:12) விசுவாசிக்கப்பட வேண்டியவைகளாய் உள்ளன.
- இயேசு உயிர்ப்பிக்கப்பட்டுள்ளார் (ரோமர் 10:9).
- இயேசு தமது இரத்தத்தின் மூலமாக நமது பாவங்களுக்குக் கிருபாதார பலியானார் (ரோமர் 3:26).
- தேவன் நமது வாழ்வில் செயல்படுகின்றார் (கொலோ. 2:12).

நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்பதை தேவன் தேர்ந்தெடுத்துள்ளார் - ஆனால் நாம் எதை விசுவாசிக்கவும் செய்யவும் வேண்டும் என்பதை அவர் ஏன் தேர்ந்து கொண்டுள்ளார் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கேட்பதில்லை. நாம் ஏன் இயேசுவிலும் அவரது இரத்தத்திலும் விசுவாசம் கொள்ள வேண்டும் என்று அவர் தேர்ந்து கொண்டுள்ளார் என்பதையோ அல்லது மன்னிக்கப்படுவதற்கு நாம் மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அவர்

ஏன் தேர்ந்து கொண்டார் என்பதையோ நாம் ஒருக்காலும் அறியாமல் போகலாம். அவர் இந்தத் தெரிவுகளை ஏற்படுத்தியது ஏன் என்று நாம் கேட்க வேண்டியதில்லை. மாறாக, தேவன் என்ன செய்வார் என்பதில் விசுவாசம் கொண்டு நாம் செயல்பட வேண்டும்.

## நாம் தீர்மானிக்க வேண்டியது என்ன

### ஒரு புதுப் படைப்பாவதற்கு

நாம் நம்மைச் சுற்றிலும் உள்ள துன்மார்க்க உலகிலிருந்து வித்தியாசப் பட்ட புதிய மக்களாக வேண்டும். நாம் இயேசுவுக்கான ஊழியத்தில் நமது உடல்களை உயிருள்ள ஜீவ பலிகளாக ஒப்புக் கொடுத்துள்ளோம். பவுல், "… விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்" (கலா. 6:15) என்று கூறினார். மேலும் அவர் பின்வருமாறும் கூட எழுதினார்:

> அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதா கிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1, 2).
>
> இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டி யாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17).

இருதயத்திலிருந்து கீழ்ப்படிதலின் விளைவாக ஞானஸ்நானத்தில் இந்தப் புது சிருஷ்டியும் சுயதியாகமும் நடைபெறுகின்றன (ரோமர் 6:4-7, 17, 18). இருதயத்துடன் இணைவு இன்றி நமது பகுதியில் செய்யப்படுகின்ற உடல்ரீதியான செயல் போதுமானதாய் இருப்பதில்லை. மதுபானப்பழக்கம் கொண்டவர் சபைக் கட்டிடத்தின் முன் கதவு வழியே உள் இழுத்து வரப் பட்டு, பின்கதவு வழியே வெளித்தள்ளப்பட்டால் தனது குடிப்பழக்கத் திலிருந்து குணமாக்கப்பட முடியும் என்பதைக் காட்டிலும் அதிகமான வகையில் நாம் தண்ணீரில் முழுக்காட்டப்படுவதினால் மட்டும் மாற்றப் படுவதில்லை. நாம் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது இருதயத்தில் மாற்றம் கொண்டிருந்தால் மட்டுமே புது சிருஷ்டிகள் ஆகின்றோம்.

ஞானஸ்நானத்தின் சந்தர்ப்பப் பொருளில் (ரோமர் 6:3-7) பவுல் இதைப் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்: "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு,

*நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6:17, 18).*

*நாம் பழைய மனிதனைக் களைத்து விட்டுப் புதிய மனிதனை அணிந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். கொலோ. 3:9, 10ல், "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செயல்களையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே" என்று கூறப்படுகின்றது.*

*நாம் இயேசுவைப் பற்றிக் கற்றுக்கொள்ளும் பொழுது, நாம் கிறிஸ்தவர்களாகும் வேளையில் பாவம் நிறைந்த பழக்கங்கள் யாவும் கடந்த கால விஷயமாகின்றன என்பதை உணர வேண்டியவர்களாய் இருக்கின்றோம். எபே. 4:20-24ல் பின்வருமாறு கூறப்படுகின்றது:*

> *நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.*

*ஞானஸ்நானத்தில் ஏற்பட வேண்டிய மாற்றத்தை ஒரு சிறு குழந்தையானது புரிந்து கொள்ளவோ அல்லது செயல்படுத்தவோ முடியாது என்பது தான் குழந்தை ஞானஸ்நானத்தில் உள்ள பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது. அக்குழந்தையானது தனது இருதயத்திலிருந்து கீழ்ப்படிய முடியாது, ஏனென்றால் அது தான் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது நடைபெற வேண்டிய இருதய மாற்றத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளுவதில்லை.*

*கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற இரட்சிப்பை நாம் விரும்புகின்ற பொழுது, நாம் அவருடைய மன்னிப்பை நாடியவர்களாய் இருதயத்தில் உண்மைத் தன்மையுடன் அவரிடத்தில் வர வேண்டியவர்களாய் இருக்கின்றோம். ஞானஸ்நானத்தில் நாம் அவருடன் அடக்கம் செய்யப்படுகையில், அவருக்காகப் புதுப்படைப்பாக வேண்டுமென்று நாம் தீர்மானம் செய்ய வேண்டும். இதைக் காட்டிலும் குறைவான நோக்கத்துடன் நாம் ஞானஸ்நானத்தை நெருங்கினால், நாம் ஞானஸ்நானத்தின் அர்த்தத்தைத் தவிற விட்டுவிடுகின்றோம்.*

## சீஷராவதற்கு

*யோவானால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவரது சீஷரானார்கள், அதே போல, இயேசுவின் ஞானஸ்நானத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அவருடைய சீஷரானார்கள் (யோவா. 4:1). "சீஷர்" (கிரேக்கம்: mathetes) என்ற வார்த்தையானது ஒருவருடைய போதனையில் அவரைப் பின்பற்றும்படியாக அவரிடமிருந்து கற்றுக் கொள்பவரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு நபருடைய நாமத்தில் (பெயரில்)*

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுதல் என்பது, ஞானஸ்நானம் பெறுபவர் அந்த நபருடைய போதனையை ஏற்றுக் கொள்வதையும் அந்நபரின் சீஷராவதையும் மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது.

1 கொரிந்தியர் நிருபத்தில் பவுல், கொரிந்து சபைக்குள் இருந்த பிரிவினையைப் பற்றிப் பேசியிருந்தார். அங்கிருந்த உறுப்பினர்கள் பலரும் தாங்கள் பவுல், அப்பொல்லோ மற்றும் கேபா (அதாவது பேதுரு; யோவா. 1:42ஐக் காணவும்) போன்ற தலை சிறந்த வித்தியாசப்பட்ட கிறிஸ்தவர் களின் சீஷர்களாயிருந்ததாகக் கூறிக் கொண்டிருந்தனர் (1 கொரி. 1:10-16). பவுல் அவர்களிடம், அவர்கள் பவுலின் நாமத்திலேயா ஞானஸ்நானம் பெற்றனர் என்று கேட்டார் (1 கொரி. 1:13). அவர்கள் பவுலின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறாதிருந்தால், அவர்கள் பவுலின் சீஷர்கள் என்று உறுதிப்படுத்தக் கூடாது என்பதே இவ்விடத்தில் மறைவான கருத்தாய் உள்ளது.

நாம் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும் பொழுது, நாம் அவரைப் பின்பற்றுகின்றவர்களாகின்றோம் - அதாவது அவர் நமது ஆண்டவராகின்றார், நாம் அவரது ஊழியர்கள் ஆகின்றோம் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். இனியும் நாம் பாவத்திற்கு ஊழியம் செய்கின்ற வர்களாய் இருக்கக் கூடாது; அதற்குப் பதில் நாம் இயேசுவுக்கு ஊழியம் செய்கின்றவர்களாய் இருக்க வேண்டும். அவரை நாம் ஆண்டவரென்று ஏற்றுக் கொண்டு, தலை என்ற வகையில் அவருக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும் (எபே. 5:24).

## தொகுப்புரை

ஞானஸ்நானம் என்பது ஆவிக்குரிய இணைவுகளும் மறை கருத்துக்களும் கொண்ட, உடல் ரீதியான செயலாக உள்ளது. இவைகள் இன்றி ஞானஸ்நானம் மதிப்பற்றதாக உள்ளது. வேதாகம ரீதியான கண்ணோக்கில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு, தேவனுடன் உள்ள உறவில் இருக்கும் தவறை (ஞானஸ்நானத்தில்) நாம் பாவமன்னிப்பின் மூலமாக நேராக்கிக் கொள்ளுகின்றோம் என்பதை உணர வேண்டும். பாவம் நிறைந்த வாழ்வை விட்டுவிட்டு, நமது ஒரே ஆண்டவரும் எஜமானருமாகிய இயேசுவுக்கு நம்மை ஒப்புக் கொடுக்கும் புதிய வாழ்வினுள் பிரவேசிக்க நாம் உறுதியெடுத்தவர்களாய் இருக்க வேண்டும்.

---

குறிப்பு

[1]இயேசு “நானே இருக்கிறவராயிருக்கிறேன்” (“I am He”) என்று உரைத்தார். கிரேக்க மொழியில் “He” என்பது இல்லாதுள்ளது (யோவா. 8:24; 8:28, 58; 13:19 ஆகியவற்றையும் காணவும்). எனவே ஆங்கில வேத வசனப்பகுதியும் “I am” என்று இயேசு கூறியதாகவே வாசிக்கப்பட வேண்டும்.